# சம்மாந்துறை பிரதேச சபையின் 18 வது கூட்டறிக்கை
# 2019.08.06

சம்மாந்துறை பிரதேச சபையின் 18 ஆவது அமர்வு 2019.08.06 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

## சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 03. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 05. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 09. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ. யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

## சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 01. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |

## சமூகமளித்த உத்தியோகத்தர்கள்

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

## கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 18 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

கௌரவ உப தவிசாளர் ஜெயச்சந்திரன், கௌரவ உறுப்பினர் அஸ்வர், கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ் மூவரும் இன்றய சபை அமர்விற்கு வருகைதர முடியாதென்று அறிவித்தல் விடுத்திருக்கின்றார். அவர்களுக்கு விடுமுறை வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.எம் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கூட்டறிக்கையை சிறிய மாற்றத்துடன் அங்கீகரிக்க வேண்டும் என்று பணிவாக வேண்டுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் பேசிய சில விடயங்கள் அதாவது 09 ஆம் பக்கத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிட்டிருந்தேன். அவைகள் இதில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 03 ஆம் பக்கத்தில் கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கேட்ட கேள்விக்கு நான் பதில் கூறியிருந்தேன். அதனையும் இதில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 15 ஆம் பக்கத்தில் எனது உரையிலும் சில விடயங்கள் சேர்த்துக் கொள்ளப்படவில்லை அதனையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இக் கூட்டறிக்கை 30, 40 பக்கங்கள் வருகின்றது. தீர்மானங்களுடன் சாராம்சமான விடையங்களை அல்லது தீர்மானங்களை மாத்திரம் சேர்ததுவிட்டு கௌரவ உறுப்பினர்களுக்கு CD வழங்கலாம் என்று உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கள் கூறினார்கள். இது தொடர்பாக நாம் எதிர்வரும் அமர்வுகளில் கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களோடு ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மார்ச் 31 ஆந் திகதிக்கு கொடுக்க வேண்டிய சொத்துக்கள் விபரம் சமர்ப்பிக்காத உறுப்பினர்களுக்கு சென்ற அமர்வுக்குரிய கொடுப்பனவு சபைக்கு மீளளிக்கப்படவில்லை. எனவே அவைகளை உடனடியாக அனுப்புவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள்.

கௌரவ உறுப்பினர் சிஹாமாவுக்கு நன்றி கூற வேண்டும். குழுக்களை அமைப்பதற்கு தாமதமானதற்கு காரணம் சில கௌரவ உறுப்பினர்களைத் தவிர மற்றய கௌரவ உறுப்பினர்கள் தரவில்லை. இருந்தும் கிடைக்கப்பெற்றவைகளை வைத்து பொதுவாக இக் குழு உருவாக்கப்பட்டு அதன் பிரதி தங்களுக்கு தரப்பட்டுள்ளது. அதில் எவரையாவது முக்கியமாக சேர்க்க வேண்டுமானால் அதனை எழுத்து மூலம் என்னிடம் சமர்ப்பிக்கலாம். அந்தந்த குழுக்களுக்குரிய தலைவர்கள் அவைகளை இந்த மாதத்திற்குள் ஆரம்பிக்க வேண்டும். காரணம் 06 மாதத்திற்குரிய வரவு செலவுத் திட்டம் தரப்பட்டுள்ளது. எனவே இக் குழுக்களுடன் தங்களது பங்களிப்புக்களையும் வழங்கி இம் மாத இறுதிக்குள் உங்கள் அபிப்பிராயங்களை சமர்ப்பிக்க வேண்டும். ஏனென்றால் 09 ஆம் மாதம் மக்கள் சந்திப்பில் சனசமூக நிலையங்களும் இணைந்து வரவு செலவுத் திட்டம்

தயாரிக்க வேண்டியுள்ளது. எனவே அதில் மக்கள் பங்களிப்பு மாத்திரமல்ல மக்களின் பிரதிநிதிகளின் பங்களிப்பும் மிக அவசியமாக இருக்க வேண்டும் என்பது எமது சபையின் அவா.

சபைக்கு மொத்தமாக வந்த வருமானத்தில் வரிகள் எமது வரவு செலவுத் திட்டத்தில் 4.3 மில்லியன். அதில் 4.1 மில்லியன் பெற்றுள்ளோம். அதில் 3.1 மில்லியன் வரவேண்டியுள்ளது. இன்னும் 3.5 மில்லியன் சேர்க்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளது. இது ஒரு தற்காலிக ஊழியரின் தனி முயற்சியினால் இரவு பகலாக கஸ்டப்பட்டு 3.5 மில்லியன் பெறப்பட்டுள்ளது. எனவே அனைவரும் இதில் அக்கரை செலுத்தினால் 02 மாதத்திற்குள் எமக்கு வரவேண்டிய வரிகளை பெற்றுவிடலாம்.

குற்றப் பணங்கள் 4.9 மில்லியன், உத்தரவுப் பத்திரங்கள் 1 மில்லியன், இறைச்சிக்கடை, பொதுச் சந்தை குத்தகைகள் 8 மில்லியன். இவைகள் அனைத்தும் சேர்ந்து 22 மில்லியன். ஆனால் செலவு 25 மில்லியன். அதில் நிரந்தர, பதிலீட்டு ஊழியர்கள் சம்பளம், திண்மக் கழிவு கொடுப்பனவு, வீதி விளக்குகளுக்கு (06 மாதத்திற்கு 14 இலட்சம்) போன்றவற்றுக்கான செலவுகளாகும். இதனை தங்களுக்கு தருவதற்கு காரணம் இவைகளை உள்வாங்கினீர்களேயானால் தங்களுக்கு ஏதாவது முறைப்பாடுகள், வேண்டுகோள்களுக்கு நீங்கள் சரியான முறையில் பதில் கூற வேண்டியவாறு அமையும்.

தயவு செய்து வருமானத்தை எவ்வாறு கூட்டலாம்? அவ் வருமானத்தை பிரதேச சபை சட்டத்தின் படி எவற்றுக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டுமோ அவ்விடயங்களுக்கு எவ்வாறு செலவுகளை ஒழுங்குபடுத்தலாம் என்பதில் அக்கரை செலுத்தி இந்த மாத இறுதிக்குள் தங்களது ஆக்கபூர்வமான கருத்துக்களை, சிபாரிசுகளை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
2016 ஆம் ஆண்டில் நகர திட்டமிடல் அமைச்சினால் ஆரம்பித்த வேலைகள் பிரதம செயலாளர் அவர்களினால் ஒரு திட்டத்தை உருவாக்கி செயற்படாததனால் தற்போது பிரதம பொறியியலாளர் இராசமோகனை நியமித்துள்ளார். அவர் கொந்தராத்துக் காரர்கள் அனைவருடனும், சபையுடனும் கலந்துரையாடி மிக விரைவில் அவரது அறிக்கையை தரும்படி கூறப்பட்டுள்ளது.

பஸ் தரிப்பிடத்திற்குரிய காணி விடயம் நீதி மன்றத்திற்கு சென்றுள்ளது. MPCS அக்காணியை பஸ் தரிப்பிடத்திற்கு விடுவிக்க முடியாது என்பதனால் பாவனை இல்லாமல் இருக்கும் 02 றூட் 39 பேர்ச் அரச காணியை பிரதேச சபைக்கு பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு மீளப்பெறுவதற்காக பிரதேச செயலாளர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பித்து எமக்கும் கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அவ் வழக்கு எதிர்வரும் 2019.08.08 ஆந் திகதி முதலாவது அழைப்பிற்கு கௌரவ நீதிபதியனால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனால் குறித்த காணியை எமக்கு பாராதீனப்படுத்துவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளது. என்பதனை தங்களுக்கு தெரியப்படுத்துவதுடன் குறித்த காணியை நீதிமன்றத்தின் கட்டளைப்படி மீளப்பெற்று எமக்கு விரைவாக கையளிப்பது தொடர்பாக எமது ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

MPCS ஐப் பொறுத்தவரையில் அச் சபையிலும் நானும் ஒரு அங்கத்தவர். எமது சபை உண்மையாக நியாயமாக நடந்துள்ளது. பெற்றோல் செட் கூரை தடுத்து வைத்திருந்ததனை நாம் அதனை மீண்டும் செயற்படுத்த விட்டதற்கு காரணம் MPCS இனை இல்லாமல் செய்யும் என்னம் எமது சபைக்கு இல்லை. ஆனால் ஊரின் அபிவிருத்தியில் அவர்களும் பங்காளியாக மாற வேண்டும். ஆரம்பத்தில் சந்தையாகவும், பஸ் தரிப்பிடமாகவும் உபயோகிக்கப்பட்டு தற்போது பாவனையில் இல்லாமல் காணப்படுகின்றது. அதனை ஊரின் அபிவிருத்திக்காக இனங்காணப்பட்டதன் பின் ஏதோ ஒரு காரணத்திற்காக தடையாக இருப்பதற்கு நாம் சோரம் போக முடியாது. ஏனென்றால் சபை ஏகமனதாக தீர்மானம் எடுத்து அமைச்சுக்குக்கு அனுப்பப்பட்டுள்ளது. அது எப் பாகுபாடும் இல்லாமல் செய்யப்படுகின்றது.

இதன் பராமரிப்பு எமது பிரதேச சபைக்குரியது. பிரதேச சபை என்பது எமது ஊர் மக்களுக்குரியது. எனவே இவ் வழக்கில் எம்மிடம் உள்ள ஆவணங்களையும் ஏன் இதனை கோருகின்றது என்பதனை விளக்கி நியாயப்படுத்துவதற்கு ஓர் வழக்கறிஞரை நியமிக்க வேண்டும். ஏனென்றால் 2014 ஆம் ஆண்டு UDA பல்நோக்கு கூட்டுறவு சங்கத் தலைவர், பிரதேச சபை தவிசாளர் மூவரும் இணைந்து கலந்துரையாடல் செய்து அதற்கான கூட்டக்குறிப்பும் உள்ளது. அதில் பல்நோக்கு கூட்டுறவு சங்கம் ஒப்புக்கொண்டு அதனை இவ்வாறுதான் செய்ய வேண்டும் என்று அந்நேரம் வரையப்பட்ட படமும் உள்ளது. அதனை மையமாக வைத்தே கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் முன்வைத்துள்ளார்.

**தீர்மானம் 02**

பாவனையில்லாமல் இருக்கும் MPCS அமைந்துள்ள குறிப்பிட்ட அரச காணியை பிரதேச சபைக்கு பஸ் தரிப்பிடம் அமைப்பதற்கு மீளப் பெறுவதற்காக பிரதேச செயலாளர் நீதி மன்றம் சென்றுள்ளதாக எமக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளார். அதற்கமைய எமது பிரதேச சபை ஏன் அதனைக் கோருகின்றது என்பதனை விளக்குவதற்காக ஒரு வழக்கறிஞ்சரை நியமிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது சபைக்கு துரதிஸ்டவசமாக எமது அதிகார காலத்தில் இன்று வரையும் அரசாங்கத்தினால் பெரியளவில் நேரடியாக உதவிகள் வரவில்லை. மேலும் நாட்டின் சூழல்கள், அரசியல் குழப்பங்கள் எம்மை பாரிய மாற்றம் செய்யக்கூடிய சபையாக இயங்குவதற்கு எமக்கு காலமும் துனையாக இருக்கவில்லை. ஆனாலும் இக்காரணங்களைக் கூறிக்கொண்டு சபையை நடாத்த முடியாது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு திறமை உள்ளது. நாளாந்தம் சபைக்கு வந்து என்னுடன் கடமையாற்றினால் எனது நாள் எவ்வாறு செல்கின்றது என்பது பற்றி தாங்களும் விளங்கிக்கொள்வீர்கள். அவ்வாறு நாளாந்தம் வேலை செய்து கொண்டு பாரிய மாற்றங்கள் அல்லது கனவு கான முடியாது. அக்கனவுகளை நீங்கள் கான வேண்டும். அனுபவமுள்ளவர்கள், ஆற்றலுள்ளவர்கள், பல துறைகளில் தொடர்புபட்டவர்கள் இருக்கின்றீர்கள். ஒவ்வொருவரும் சுற்றுநிரூபங்களை படித்து இருக்கின்ற வழிகளில் தேடிக்கொள்ள வேண்டும்.

அந்த வகையில் கௌரவ உறுப்பினர் மாஹிர், கௌரவ உறுப்பினர் சிஹாமா இருவரும் சபைக்கு அப்பால் செயற்படுத்தக் கூடிய திட்டங்களையும் வழிகளையும் செயற்படுத்துகின்றார்கள். அதற்காக ஏனையவர்கள் செயற்படவில்லை என்று குறிப்பிடவில்லை. அவைகள் சரியான முடிவுக்கு கொண்டுவரவில்லை. உதாரணமாக பார்த்தால் சென்னெல் கிராமத்தில் உள்ள சந்தைக்கு முயற்சி செய்தும் இடையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி இஸ்மாயில் அவர்கள் தேசிய திட்டமிடல் அமைச்சின் கீழ் 41 மில்லியன் தொகை GA மூலம் கடிதம் வந்தவுடன் எமது சபை அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. நாம் அதனை அரவணைத்து எவ்வாறு செயற்படுத்தலாம் என்கின்ற முறையில் உள்ளோம்.

இவைகள் அரசியலுக்கு அப்பால் செயற்படுத்துபவைகள். அதேபோல் சிறிய சிறிய வேலைகள் செய்துள்ளோம். ஆனால் சபைக்கு வருமானம் வரக்கூடிய திட்டங்களை நாம் உருவாக்க வேண்டும். உதாரணமாக கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் ஆரம்பத்தில் குறிப்பிட்ட விடயம் பணம் இல்லாவிட்டாலும் வங்கிக் கடன் மூலமாவது ஹிஜ்ரா பொதுச் சந்தையில் டிஜிட்டல் விளம்பரப் பலகை செய்தால் எமக்கு வரும் வருமானத்தின் மூலம் அக் கடனை கட்டலாம். அதே போல் மக்களுக்கு நாம் தெரியப்படுத்த வேண்டிய செய்திகள், விளம்பரங்கள் அனைத்திற்கும் உபயோகித்து வருமானத்தை பெறலாம்.

அதே போல் உதவித் தவிசாளர் அவர்கள் கூறிய விடயம் வளத்தாப்பிட்டியில் இந்து மக்களின் உடலை எரிக்கும் கிரமட்டோடியம் அமைத்தால் அதன் மூலமும் வருமானத்தைப் பெறலாம். வளத்தாப்பிட்டி மக்கள் அம்பாரைக்குச் சென்று பணம் செலுத்தி செய்கின்றனர். எனவே வளத்தாப்பிட்டியில் அவர்களது மயானத்தில் அதனை அமைத்தால் அதன் மூலமும் வருமானத்தைப் பெறலாம். இவ்வாறு ஒவ்வொரு பகுதியிலும் ஏதாவது ஒரு திட்டத்தை உருவாக்குவதற்கு இக் குழுக்கள் உதவியாக இருக்கும். ஒவ்வொரு உறுப்பினரும் எமது காலத்திற்குள் ஏதாவது நிலையான அபிவிருத்தியை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இயங்க வேண்டும். அதனை குழுக்கள் மூலமும், குழுக்களுக்கு அப்பாலும் ஒவ்வொரு கௌரவ உறுப்பினர்களும் ஒவ்வொரு கடமையிலும் என்னுடன் இணைந்து ஓர் மேற்பார்வை உறுப்பினராக இயங்குவதற்கு நீங்கள் முன்வருவீர்களேயானால் நிச்சயமாக அப் பொறுப்பை எனது மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தலாம்.

செலவீனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை தொர்பாக நன்கு ஆராய்ந்து வாகனக்குழு உறுப்பினர்களில் கௌரவ உறுப்பினர் முஸம்மில் அவர்களே வாகனங்களை நன்கு ஆராய்ந்து எந்தந்த வாகனங்களை நாம் மாற்ற வேண்டும் என்று நீங்கள் கூற வேண்டும். அதாவது சில வாகனங்கள் 05,06 வருடமாகின்றது. அவைகளை வைத்திருப்பதனால் தொடர்ந்தும் செலவுகள் கூடுமானால் அதனை விட புதிதாக வாகனங்களை கொள்வனவு செய்வது சிறந்ததாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, வாகனங்கள் தொடர்பாக பார்ப்பதற்கு குழு அமைப்பதில் இருந்து அவைகள் தொடர்பாக யாரும் எங்களிடம் அறிவிக்கவில்லை. கராச்சிற்கு சென்றால் மிசின் கழற்றப்பட்டிருக்கும். அதன் பற்றுச்சீட்டை பார்த்தால் பெயின்ட்க்கு வேறாகவும், பெயின்ட் பூசியதற்கு வேறாகவும் ஒவ்வொன்றையும் பிரித்துப் பிரித்து பற்றுச்சீட்டுக்கள் போடப்பட்டிருக்கின்றது. ஆனால் அவ்வாறு செய்வதில்லை. அவைகள் அனைத்தையும் ஒருவரிடம் ஒரு தொகையை பேசி வழங்குவதுதான் வழக்கம். அவ்வாறில்லாமல் அனைத்திற்கும் தனித்தனியாக பற்றுச்சீட்டு கொடுக்கப்படுகின்றது. இது தொடர்பாக கேட்டால் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் பல கருத்துக்களை குறிப்பிடுகின்றனர்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த நாட்களில் அவ்வாறு நடைபெறவில்லை. எமது வரவு செலவுத் திட்டத்தின் ஒதுக்கீட்டின் படி வாகனங்களின் பகுதிகளுக்கும், பெயின்ட்டுக்கு வேறாகவும், சேவிசுக்கு வேறாகவும், வேலைக்கு வேறாகவும் செலவீனங்கள் ஒதுக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சில பற்றுச்சீட்டுக்கள் உள்ளது. நீங்களும் பாரத்தால் விளங்கிக்கொள்வீர்கள். எனவே இதில் நாங்களும் கலந்து கொள்ளவேண்டுமானால் அவைகளை நாங்கள் சொல்வது போல் செய்ய வேண்டும். அவ்வாறில்லாமல் அவர்கள் நினைத்த மாதிரி செய்துவிட்டு எங்களிடம் ஒப்பம் கேட்டால் நாங்கள் ஒப்பம் வழங்க மாட்டோம். இதுவரை நாங்கள் எந்த விடயத்திற்கும் ஒப்பம் வழங்கவில்லை.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ரா பொதுச் சந்தையின் கட்டடத் தொகுதி மின்சாரக் கட்டணம் வேறாகவும், ஹிஜ்ரா பொதுச் சந்தை கடையறை வேறாகவும், ஹிஜ்ரா பொதுச் சந்தை வேறாகவும் காட்டப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஹிஜ்ரா பொதுச் சந்தையில் 03 மீட்டர்கள் உள்ளது. மேல் மாடிக்கு ஒன்றும், மீன் சந்தைக்கு ஒன்றும், கடை ஒன்றுக்கு பாவனை இல்லாத மீட்டர் உள்ளது. 240 ரூபா தொடர்ந்து வருகின்றது. மற்றயவை இரண்டும் இரண்டு பகுதியாக இருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பிடி காசுகள் வழங்கப்பட்ட விளக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முதல் எமது சபையினால் நகரத் திட்டமிடல் அமைச்சினால் நிதி ஒதுக்கப்பட்டு செய்யப்பட்ட வேலைகளுக்கு பெயர்ப்பலகை இடப்படவில்லை. எனவே பிடி காசு கொடுப்பதற்கு முன் அதனை போடுமாறு சபையில் தீர்மானம் எடுத்தும் இது வரையும் ஒரு பெயர்ப்பலகை கூட செய்தவாறு தெரியவில்லை. ஆனால் பிடி காசு அனைத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெயர்ப் பலகை போடாமல் அதற்குரிய கட்டணம் வழங்க முடியாது. இல்லாவிட்டால் அதற்குரிய பணத்தை கழித்துவிட்டு வழங்கி இருக்கலாம். ஏனென்றால் அவைகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றவைகள். பெயர்ப் பலகை போடப்பட்டால் அதன் நிழல் படம் பற்றுச்சீட்டுடன் வரும். செயலாளர் அவர்கள் அதனை ஆராய்ந்து பார்த்து கௌரவ உறுப்பினருக்கு எழுத்து மூலம் தெரிவிக்க வேண்டும்.

**தீர்மானம் 03**
சென்ற மாதம் 2019.07.01 தொடக்கம் 2019.07.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**தீர்மானம் 04**
2019 ஆம் ஆண்டுக்கான அனுமதி வழங்கப்பட்ட கீழ்வரும் PSDG வேலைத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

## வேலைகளின் விபரங்கள்

01. Improvement of Treatment Plant Stage III and Construction of Boundary Wall for Treatment Plant, Veeramunai - 04, Sammanthurai
02. Gladding & Painting for Majeed Hall Sammanthurai - 02
03. Fixing Street light System to Pradeshiya Sabha Ariya

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
ஜனாதிபதி விளையாட்டு கட்டடத் தொகுதியில் GYM தொகுதி உள்ளது. அதில் உள்ள சில உபகரணங்கள் திருத்த வேண்டியுள்ளது. அதனை திருத்தும் செலவை விட புதிதாக கொள்வனவு செய்யலாம் என்ற நிலையில் உள்ளது. எனவே இதனை தனியார் நிறுவனத்தின் கீழ் இயக்கலாமா? என்ற கருத்து எழுகின்றது. ஏனென்றால் GYM இயக்குகின்ற தனியார் நிறுவனம் வைத்திருப்பவர் அதனை எமது விளையாட்டுக் கட்டடத் தொகுதியல் உள்ள GYM உடன் இணைத்து இயக்க முடியுமா என்று கேட்டுள்ளார். அதனைக் கண்டிப்பாக உபயோகிக்க வேண்டும். ஆனால் அவை பாவனை இல்லாமல் உள்ளது. அதனை திறமையாக செய்வதற்கு தனியார் பொது மக்களின் பங்குபற்றுதலுக்கு வழங்கலாமா? கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறிய முயற்சி ஒன்று செய்துள்ளேன். அது வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க்கின்றேன். அன்மையில் நடைபெற்ற சர்வதேச மகாநாட்டில் ஜிபுஜி திட்டத்தில் இளைஞர்கள் போதை வஸ்த்து இல்லாமல் ஒழிப்பதற்காக விளையாட்டுத்துறையை ஊக்குவிப்பதற்கு திட்ட முன்மொழிவு கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள் சரியாக வருமானால் எமக்கு சில உபகரணங்கள் வரும் அவைகளை சம்மாந்துறை விளையாட்டுக் கட்டடத் தொகுதிக்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய வழி உள்ளது. அதற்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அப்படியானால் 03 மாதத்திற்கு பின் இது தொடர்பாக ஆராய்ந்து முடிவெடுக்கலாம்.

நகர்ப்புரத்தில் அலைந்து திரியும் கட்டாக்காலி கால் நடைகள் (மாடுகள்) பிடித்து அடைப்பதற்கான செயற்பாடுகளில் பெரிய மாடு 2500 ரூபா, கன்று 1000 ரூபாவும் அறவிடப்படும். மாட்டை பிடித்துக் கொடுப்பவருக்கு ஒரு மாட்டிற்கு 500 ரூபா கொடுப்பனவுகள் வழங்க வேண்டும். இதனை நாளை நடைமுறைப்படுத்தலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாடுகள் பிடிக்கப்படுகின்ற தினத்தில் இருந்து குறிப்பிட்ட ஒரு தினத்திற்கு இப் பணம் அறவிடப்படும். மேலதிகமான நாட்களுக்குள் தங்களுடைய மாடுகளை பெற்றுக்கொள்ளாவிட்டால் அறவீட்டுப் பணத்தில் மேலதிகமான தொகையை சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனென்றால் 02 அல்லது 03 நாட்கள் அம் மாட்டை மீளப் பெறாவிட்டால் மாட்டிற்குரிய உணவுகளை நாம் கொடுக்க வேண்டி ஏற்படும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
02 நாட்களுக்குள் பெறாவிட்டால் ஒரு நாளைக்கு 1000 ரூபா வீதம் பெறப்படும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 500 ரூபா வீதம் அறிவிடலாம். ஏனென்றால் தற்செயலாக அம்மாட்டிற்கு சொந்தக்காரர் ஊரில் இல்லாத நிலையில் அவருக்கு தகவல் கிடைப்பதற்கு காலதாமதம் அதாவது ஒரு கிழமைக்குப் பின்னர் அத் தகவல் கிடைக்கப்பெற்றால் அதிகமான தொகை செலுத்த வேண்டி ஏற்படும். அதே நேரம் பராமரிப்பவருக்கே அப் பணத்தையும் நாம் வழங்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 500 ரூபா அவர்களுக்கு இலாபமாக இருக்கும் ஏனென்றால் மாடுகளுக்கான உணவு புல் போன்றவற்றின் செலவுகளை பார்க்கும் போது இத் தொகை இலாபமாக அமைவதனால் அவர்கள் விட்டு விட்டு சென்று விடுவார்கள்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மாடுகளை உடன் பிடித்தாலும் தற்போது தொழில்நுட்ப வசதிகள் (FaceBook, WhatsApp) அதிகமாக இருப்பதனால் இலகுவாக அறிந்து கொள்ளலாம். அதனால் 1000 ரூபா பெற்றுக் கொள்வதில் தடை இல்லை என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெரிய மாட்டிற்கு 1000 ரூபாவும், கன்றுக்கு 500 ரூபாவும் அறிவிடலாம்.

**தீர்மானம் 05**

நகர்ப்புறத்தில் அலைந்து திரியும் கட்டாகாலி கால் நடைகளை (மாடுகள்) பிடித்து அடைப்பதற்காக கீழ்வரும் அறவீடுகளையும், கொடுப்பனவுகளையும் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

பெரிய மாடு - 2500 ரூபா
கன்று - 1000 ரூபா

இரண்டு நாட்களுக்குள் பெறாவிட்டால் ஒரு நாளைக்கு பெரிய மாட்டிற்கு 1000 ரூபாவும், கன்றுக்கு 500 ரூபாவும் பெறப்படும். அத்தோடு மாடுகளைப் பிடிப்பவர்களுக்கு ஒரு மாட்டிற்கு 500 ரூபாவும் வழங்கப்படும்.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ். நிலுவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 06**

திண்மக்கழிவகற்றல் செயற்பாடுகளில் ஈடுபடும் CC/128/IMT/91 இலக்க Tractor, LI-3269 இலக்க பழைய கொம்பெக்டர் மற்றும் LL-6939 இலக்க Dump Truck ஆகியவற்றுக்கான முன் டயர்கள் மாற்றம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | வை.பீ.எம். முஸம்மில் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |

**தீர்மானம் 07**

எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு 07 நாட்களுக்கு மணிக்கூட்டுக் கோபுரம், பொதுச் சந்தை, அலுவலகம், அப்துல் மஜீட் மண்டபம், அமீர் அலி சிறுவர் பூங்கா போன்ற இடங்களில் மின் விளக்குகளால் அலங்கரிப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம். றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம. |

**தீர்மானம் 08**

தொழில்நுட்ப உத்தியோகத்தர்களான திரு A.யோகானந் மற்றும் ஜனாப். AA.றசாக் ஆகியோரின் வினைத் திறன் தடைகான் பரீட்சைக்கான கட்டண மீளளிப்புச் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்தசாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

‘JAICA’ திட்டம், I திட்ட வீதிகளின் பெயர்ப் பட்டியல் வேண்டுமானால் அதன் பிரதிகளை கௌரவ உறுப்பினர்கள் பெற்றுக் கொள்ளலாம். ஏனென்றால் சிலர் அறியாமையினால் அரசியலை மையமாக வைத்து பிரதேச சபை அபிவிருத்தி வேலைகளை தடை செய்கின்றது என்று ஊடகங்களில் செய்தி வெளியிடுகின்றனர். உதாரணமாகப் பார்த்தால் கபூரியா வீதி 467M அதில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் 100M ஐ 02 மில்லியன் நிதியீட்டால் அதாவது 467M இல் 100M மாத்திரம் செய்வது. இத் திட்டத்தில் தடையைக் கொண்டு வரக்கூடாது என்பதற்காகத்தான்

நாங்கள் செய்யும் படி கூறினோம். அதனை செய்வதானால் பள்ளத்தில் இருந்தே செய்ய வேண்டும் என்று எங்களது கருத்துக்களை கூறினோமோ தவிர தடை செய்யவில்லை.

ஏனென்றால் அவ்வட்டாரத்திற்குரிய கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கவனமாக செயற்படுகின்றார். ஒரு முறை கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களும் நானும் அவ்விடத்திற்கு சென்று ஒவ்வொரு இஞ்சாக அடையாளப்படுத்தினோம். சென்னெல் கிராமம் - 01,02 கல்லரிச்சல் - 02,03 போன்ற பகுதிகள் மிகவும் பின் தங்கிய இடங்கள். அவ் வீதியில் மேடு, பள்ளங்கள் அதிகமாக காணப்படுகின்றது. எனவே 'JAICA' திட்டம் கானுடன் வீதி வருவதனால் அவைகளை சரியான முறையில் செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல். சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எதிர்வரும் ஹஜ்ஜுப் பெருநாள் உழ்ஹியா கொடுக்கின்ற காலம். எனவே கரையோரத்தில் அதாவது தென்னம்பிள்ளைக் கிராமம், பௌஸ் மாவத்தை, முகைடீன் மாவத்தை போன்ற பகுதிகளில் அதிகமானவர்கள் இன்னும் கழிவுகளை கொட்டுகின்றனர். எமது பிரதேச சபையின் பெயர்ப் பலகை இருந்தும் அங்கு கழிவுகளை கொட்டுகின்றனர். இது தொடர்பாக நேற்று பொலிஸ் நியைத்திற்கு சென்று அங்குள்ள அதிகாரியிடமும் இவ்வாறான பிரச்சினைகள் இருப்பதனால் மாணவர்கள் பரீட்சைக்காக பாடசாலை செல்கின்ற போது நாய்கள் துரத்துவதாக முறைப்பாடு வந்ததன் காரணமாக கௌரவ உறுப்பினர்களுக்கு மக்கள் மதிப்பு தராவிட்டாலும் காக்கிச் சட்டைக்கு மதிப்பு கொடுப்பார்கள் என்ற நிலையில் நான் பொலிஸ் அதிகாரியிடம் கதைத்த போது அவர்கள் பிரதேச சபை, பிரதேச செயலகம், பொலிஸ் நிலையம் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை நடாத்துவோம் என்று கூறினார்கள்.

அது மாத்திரமல்ல 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க சட்டத்தில் 12 வது விதிப்படி சுற்றாடலும் வாழ் வசதிகளும் இருக்கின்ற காரணத்தினால் நாம் மிகவும் முக்கியமாக கவனம் எடுக்க வேண்டியதாக இருக்கின்றது. எனவே நாங்கள் பெண்களாக இருந்தாலும் இச் சேவைகளை செய்வதற்கு தயாராக இருக்கின்றோம். எனவே எமக்கு இத் திட்டத்தை நடாத்துவதற்கு எமது சபையூடாக வழிவகுத்து தர வேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு சபையினால் அளிக்கப்படுகின்ற விளம்பரப் பலகைக்கு மக்களும் மதிப்பளிக்க வேண்டும் என்பதற்கு விழிப்புணர்வு வழங்க வேண்டும் என்றும் நான் கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவ் விடயத்தில் பொது மக்கள் பங்காளிகள் இல்லை. சில மாட்டு வியாபாரிகள் அதாவது எமது ஊரில் திருமணம், வலீமா போன்ற நிகழ்வுகளுக்கு மாட்டிறைச்சி வேண்டுமானால் தொலைபேசியில் கூறினால் இறைச்சி மாத்திரம் வந்து சேரும். பிரதேச சபையின் அனுமதி இல்லாமலும் மடுவத்துக்கு செல்லாமலும் இறைச்சி வருகின்ற சம்பவங்கள் உருவாகின்றது. இதனைக் காட்டிக் கொடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை. பிரதேச சபையை பொறுத்தவரையில் தினமும் அந்தப் பகுதிக்குச் சென்று கழிவுகளை அகற்றிய பின்னரும் மீண்டும் அவ்விடத்தில் கழிவுகளை கொட்டுகின்றனர். அவ்வூழியர்களும் மனிதர்கள் அவர்களையும் நாம் பார்க்க வேண்டும். எனவே இதனை விழிப்புணர்வுக்கு அப்பால் தொண்டர் படையை உருவாக்கி இவைகளை செயற்படுத்த வேண்டும். வீதியின் இரு மரங்கிலும் கழிவுகளை அகற்றி துப்பரவு செய்துவிட்டு வளவுக் காரர்களக்கு துண்டுப் பிரசுரம் மூலம் அவர்களது வளவுகளை துப்பரவு செய்யும் படி அறிவித்தல் கொடுத்து அதன் பின் அவர்கள் அதனை செயற்படுத்தாவிட்டால் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரும் படி செயலாளருக்கு கட்டளை இட்டிருக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நெல்லுப்பிடிச் சந்தியில் உள்ள வயல் ஓரங்களில் பற்றைகள் அதிமாக இருப்பதனால் யானை வந்தாலும் தெரிவதில்லை. எனவே அவ்விடத்தில் உள்ள மரங்கள், பற்றைகளை வெட்டவேண்டும் என்று வயல் செய்பவர்கள் கூறுகின்றனர். எனவே சபையில் கடமையாற்றுகின்ற ஊழியர்கள் மூலம் அவைகளை செயற்படுத்தலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
எமது சபையில் Tree Prunner உள்ளது. அது 50 அடி உயரத்தில் இருக்கின்ற கிளைகளையும் வெட்டிவிடலாம். எனவே அவைகளில் நீங்கள் ஈடுபட்டு எமது ஊழியர்களுடன் நாமும் அவ் ஏரியாக்களை சிரமதானம் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்ரா பொதுச் சந்தையில் அமைந்துள்ள கடிகாரம் இயங்காமல் இருக்கின்றது. அதனை சரிசெய்ய வேண்டும்.

வீதிகளுக்கு பெயரிடுதல் தொடர்பான கூட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதனை மிக விரைவில் செயற்படுத்தினால் நன்றாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதன் கீழ் உள்ள இடைவெளிகளின் மூலம் சிறு சிறு பூச்சிகள் சென்று இயங்காமல் உள்ளது. தற்போது அதனை கொழும்பிற்கு எடுத்துச் சென்றுள்ளனர். அதனை திருத்தம் செய்து கொண்டு வந்தவுடன் மீண்டும் செயற்படுத்தலாம்.

வீதிக்கு பெயரிடுதல் தொடர்பான கூட்டத்தினை விரைவில் செயற்படுத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச சபைக்குட்பட்ட கட்டடங்கள் நிறுவுவது பற்றி பலமுறை குறிப்பிடப்படுகின்றது. அதாவது கட்டடங்கள் தவறான முறையில் நிறுவப்படுகின்றது. இதனை தனிப்பட்ட முறையில் கூறினாலும் எங்களது உத்தியோகத்தர்கள் எங்களை காட்டிக் கொடுப்பது போல் உள்ளது. அந்தக்கட்டடங்கள் உரிய முறையில் நிறுவுவதற்கும் வடிகான்களையும் நெருக்காமல் அதே அளவிற்கு கட்டுவதற்கு சென்ற காலங்களில் பிரதேச சபையூடாக ஒலி பெருக்கி மூலம் விழிப்புனர்வு அறிவித்தல் கொடுத்திருந்தோம். அதனை மீண்டும் மக்களுக்கு வழங்கினால் சிறப்பாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

ஏனென்றால் பாதைகள் எவ்வாறு விட வேண்டும் என்பது தெரியாமல் அதற்கு சில கிராம உத்தியோகத்தர்களுக்கும் அப்பாதை எவ்வளவு விட வேண்டும் என்று தெரியாமல் உள்ளது. நீர்பாசன திணைக்கள பொறியியலாளர் வாய்காலில் இருந்து 10M விடுங்கள் என்று கூறினால் அதனை புறந்தள்ளிவிட்டு செயற்படுகின்றனர். எனவே பின்விழைவுகள் வராமல் முன்கூட்டி அதனை தடுத்து நிறுத்தினால் மக்களை கஸ்டத்தில் இருந்து விடுபடச் செய்யலாம் என்று நினைக்கின்றேன். அத்துடன் எங்களது உத்தியோகத்தர்களையும் இதிலிருந்து பாதுகாப்பதுடன் நாமும் இதிலிருந்து விலகிக் கொள்ளலாம். எனவே மீண்டும் ஒரு முறை ஒலிபெருக்கி மூலம் அறிவித்தல் கொடுப்பது சாலச் சிறந்தது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது பாரிய பிரச்சினையாக உள்ளது. இது தொடர்பாக சென்ற சபையிலும் பேசியிருந்தோம். அதில் தவறு செய்பவர்கள் அனைவரும் தெரிந்தே செய்கின்றனர். துரதிஸ்டவசமான விடயம் என்னவென்றால் சபையைத்தவிர வேறு எவரும் கட்டடங்கள் சட்டபூர்வமாக அமைக்கப்படுகின்றதா? இதற்கு யார் அனுமதி வழங்கியுள்ளார்கள், இவ்விடத்தில் இக்கட்டடம் வரலாமா? என்ற

கேள்விகளை எவரும் கேட்பதில்லை. அடுத்த வீட்டுக்காரர்களும் கேட்பதில்லை. அவர்களுக்கிடையில் முரன்பாடுகள் வரும் போது அவைகளை முறைப்பாடாக எமது சபைக்கு கொண்டு வருகின்றனர். இதற்கு பல உதாரணங்களைக் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் இல்லாத காரணத்தினால் நான் பேசுகின்றேன். அல்அர்சத் பாடசாலை வீதியில் சிறு கல்வெட் ஒன்று சேதமடைந்துள்ளது. தற்போது காபட் இடப்படுகின்றது. அதில் கல்வெட் செய்யாமல் காபட் போடுபட்டால் மிகவும் சிரமமாக இருக்கும் எனவே அதனை கவனத்தில் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அக்கல்வெட்டை புணரமைத்து விட்டுத்தான் காபட் இட வேண்டும் என்று RDA யிற்கு எழுத்துமூலம் தெரிவித்துள்ளோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தனியாக பெண்களுக்கான உள்ளாசமாக பொழுது போக்கக்கூடிய இடம் சம்மாந்துறையில் இல்லாமல் உள்ளது. இஸ்மாயில் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள இடத்தை தனியார்கள் சுபீகரிக்கின்றனர். இவ்விடயம் கௌரவ உறுப்பினர்களுக்கும் தெரிந்திருக்கும். அவ்விடம் நீர்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமானது. அதனை அவர்களிடம் கேட்டதற்கு எமக்கு தருவதற்கு தயாராக இருக்கின்றனர். எனவே அதனை தற்போதிருக்கின்ற பொறியியலாளர் ஜனாப். நவாஸ் அவர்களின் காலத்திற்குள் பெற்றுக் கொண்டால் அவ்விடத்தில் வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு வந்து பெண்களுக்கான தனியான பொழுது போக்கு இடமாக அமைக்கலாம். அதனை எமது காாலத்திற்குள் ஓர் மாற்றமாக அமைக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அனைத்து நிலங்களும் பிரதேச சபைக்கு பாரம் தரும்படி 2014 ஆம் ஆண்டு நீர்பாசனத் திணைக்களத்திற்கு எழுத்துமூலம் அறிவித்து RDA பணிப்பாளரையும் அழைத்து பார்வையிட்டு 03, 04 மாதத்திற்கு முன் பொறியியலாளரிடம் இதனை எமக்கு பாரம் தரும்படி கூறியதும் அவர்கள் அதனை எமக்கு பாரம் தருவதற்கு தயாராக இல்லை. தர முடியாது என்றே கூறிவிட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, முன்னர் என்னிடம் தந்து நான் கௌரவ அமைச்சர் துமிந்த திசானாயகா அவர்களிடம் கொடுத்து அதனை தரவிருந்த போது அமைச்சுக்கள் மாறிவிட்டது. தற்போது எமக்கு வளமான பொறியியலாளர் இருக்கின்ற போதே அதனை பெற்றுக் கொள்ள முயற்சிப்பது சிறப்பாக இருக்கும். அதனை என்னிடம் தந்தால் நான் அதற்கான முயற்சிகளை மேற்கொள்வேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பொறியியலாளர் ஜனாப். நவாஸ் அவர்களையும், DDயையும், நம்பிக்கையாளர் சபை அனைவரும் கூறிய விடயம் என்னவென்றால் வாய்க்கால் அருகில் வீதி அமைத்து விட்டு பாடசாலை சுவருக்கிடையில் மரம் நட்டு ஒரு பூங்காவாக செய்வதற்குரிய திட்டத்தை முன் மொழிந்த போது அவர்கள் அதனை தருவதற்கு விரும்பவில்லை. மீண்டும் எழுத்து மூலம் அனுப்பி முயற்சித்துப் பார்ப்போம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, LDSP திட்டத்தின் கீழ் அல்ஹம்ரா பாடசாலைக்கு முன்னுள்ள பள்ளிவாசலின் பராமரிப்பில் உள்ள காணி நீர்ப்பாசனத் திணைக்களத்திற்கு சொந்தமானது. அதே நேரம் பொறியியலாளரையும் அழைத்து தொழில்நுட்ப உத்தியோகத்தர், செயலாளருடன் நாங்களும் சென்று பார்வையிட்டு அதற்கு அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. அதில் பெண்கள்

சந்தை செய்வதற்காக உள்வாங்கச் சொல்லப்பட்டது. இத் திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதா என்பது தெரியவில்லை. அவ்வாறு உள்வாங்கப்படாவிட்டால் அதனை உள்வாங்கும் படி கூறுகின்றேன்.

ஏனென்றால் அவ் ஏரியாவில் உள்ள மக்களுக்கு சந்தை வசதிகள் குறைவு. பல்கலைக்கழக விடுதிகளிலும் அதிகமான மாணவர்கள் இருக்கின்றனர். அவர்கள் அனைவரும் ஏதோ ஒரு தேவைக்காக ஹிஜ்ரா பொதுச் சந்தைக்கே வருகின்றனர். எனவே அவ்விடத்தில் பெண்கள் சந்தை அமைத்தால் பல வழிகளில் பிரயோசனம் தரக்கூடியதாகவும் இருக்கும் அத்துடன் எமது உள்ளுர் உற்பத்தியினை மக்கள் சந்தைப்படுத்தக் கூடிய வாய்ப்பினையும் ஏற்படுத்தக்கூடியதாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பள்ளிவாசல்காரர்கள் அவர்களது நிலம் என்று கூறிக் கொண்டிருக்கின்றார்கள். கொச்சிக்காய்த்தூளர்ர சந்தியில் உள்ள சந்தை விடயம் பல தடவை பேசப்பட்டது. பின்னர் அது தொடர்பாக என்ன நடைபெற்றது என்பது தெரியவில்லை.

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்குரிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கின்றேன். சபூர் பள்ளிக்குரிய நிலம் பள்ளிவாசலுக்கும் கொடுக்கப்படவில்லை. சென்ற மாதம் ஜனாப் நவாஸ் பொறியியலாளரிடம் தொடர்பு கொண்டு அந் நிலத்தினை ஆயுள் வேத மூலிகைக் கன்றுகளை செய்வதற்கு அக் காணியை ஒதுக்கித் தரும்படி கூறியுள்ளேன். மன்னிக்க வேண்டும். அதாவது ஆயுள் வேத மூலிகைகள் அருகிக்கொண்டு செல்வதனால் மூலிகைகளைப் பெறுவதற்கு கடினமாக உள்ளது. இது தொடர்பாக நீர்பாசனத் திணைக்களத்திற்கும், பிரதேச செயலகத்திற்கும் கடிதம் கொடுத்துள்ளேன். அவ்விடத்தை தயவு செய்து மூலிகை செய்வதற்கு ஒதுக்கித்தர வேண்டும் என்று தங்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினரஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, Housing & Community Development Committee க்கு அங்கத்தவராக சேர்ந்ததையிட்டு கௌரவ தவிசாளர் அவர்களுக்கும், செயலாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எமது சபை உண்மையில் பலதரப்பட்ட திறமைசாலிகளையும் பலதரப்பட்ட துறைகளையும் உள்ளடக்கியதாகவும் இருக்கின்றது. அதன் அடிப்படையில் FaceBook செய்தியின்படி கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்களுக்கு உத்தியோக பூர்வமாக அமைப்பாளர் பதவி கௌரவ ஜனாதிபதி மைத்திரிபால சிறீசேன அவர்களால் வழங்கியதையிட்டு சபை சார்பாகவும் தனிப்பட்ட முறையிலும் வாழ்த்துகின்றேன். கௌரவ அச்சி முஹம்மட் அவர்கள் எமது சபையூடாக ஊர் மக்களுக்கு செய்யக்கூடிய அதி உச்ச சேவைகளை அவருக்கு கிடைத்திருக்கின்ற பதவியைக் கொண்டு செய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கின்றேன்.

RDD பொறியியலாளரையும், RDA பொறிறலாளரும் எனது நன்பருமாகிய சிவா அவர்களையும் சந்தித்த போது அவர்ளிடம் உங்களின் செயற்பாட்டின் ஊடாக எங்களது பாதைகள் செப்பனிடப்படுகின்ற வேளைகளில் கான்களில் மண், தார்களை இடுகின்றனர். அவ்வாறு மேலதிகமான செலவினை ஏற்படுத்தக்கூடிய வழிகளை கொந்தராத்துக் காரர்கள் செய்கின்றமையினால் பிரச்சினை ஏற்படுகின்றது. எனவே தங்களது ஊழியர்கள் மூலம் அவர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதுடன் நடைபெற்றதை முடிந்தவரை துப்பரவு செய்துதரும்படியும் நான் அவர்களிடம் கூறியிருக்கின்றேன்.

ஹிஜ்றா 03ம் வீதியில் டெலிக்கொம்மிற்குரிய இரண்டு கனுக்கள் உள்ளது. இது சென்ற சபையிலும் நினைவுபடுத்தியிருந்தேன். எனவே அவர்களுக்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்கும்படியும் கேட்டுக் கொள்வதுடன் LDP அறிக்கையில் ஹிஜ்றா 01ம் வீதியில் மிகுதி வேலை உள்ளடக்கியிருக்கின்றது. அதற்கும் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவ்வேலை RDP நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த மாத அமர்வின் போது சபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி 2018, 2019 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்டிருக்கின்ற குளர்பாடுகளை சீர் செய்வதற்காக ஒரு கணக்காளரை நியமித்து அதனூடாக கணக்கறிக்கைகளை சரி செய்ததன் பின்னர் மீதியாகவுள்ள வரவு செலவுத்திட்டத்தின் நிதியினைக் கொண்டு அபிவிருத்திக்கு ஒதுக்கீடு செய்வதாகவும் கூறியிருந்தீர்கள். அவ்வாறு ஒரு மாத காலத்திற்குள் முடிவடையாவிட்டால் மீண்டும் நீடிப்பதாகவும் கூறியிருந்தீர்கள். அவை இதுவரைக்கும் என்ன நடைபெற்றுள்ளது என்பது தெரியாமல் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சட்டத்திற்குள் வகைமாற்றம் செய்துள்ளோம். இது தொடர்பாக இன்று காலையிலும் பிரதம செயலாளரிடமும் DCS நிதியாளரிடமும் ICT, கணக்கியல் முடித்த பட்டதாரிகளை எமது சபைக்கு நியமிக்கும்படி குறிப்பிட்டுள்ளேன். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் ஒருவரை நியமிப்பதற்கு முடியாமல் உள்ளது. நாம் இணங்கண்டவர் சென்ற இடத்தில் இருந்து கொண்டு இவ்விடயத்தை செய்ய முடியாமல் உள்ளது. இன்னும் இதற்கு ஒரவரைத் தேடுவதற்கு காலம் வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பெற்றோல் நிரப்பு நிலையத்தில் அமைக்கப்படுகின்ற கூரை எமது சபையின் அங்கீகாரம் பெற்று செய்யப்பட்டிருந்தால் அதற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள படங்களின் அடிப்படையிலா செய்யப்படுகின்றது?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது ஆரம்பத்தில் சர்ச்சைக்குரிய விடயமாக இருந்தது. அவர்கள் எத்திட்டமும் இல்லாமல் ஆரம்பித்து விட்டு பின் எமது சபை வரைபடங்களை எடுத்தே அனுமதி வழங்கியிருந்தது. ஆனால் இன்று செய்யப்படுபவை அவ்வரைபடத்திற்கு முரனானது. எம்மிடம் சமர்ப்பித்த வரைபடத்தின்படி செய்வதற்குரிய நிதி ஒதுக்கீடு போதாததனால் வங்கியில் கடன் பெற்று செய்கின்றனர். எமக்கு அதில் பிரச்சினையில்லை. ஆனால் அவர்களுக்கு பொருத்தமில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் எம்க்கும் பங்குண்டு. பொது மக்கள் இது பற்றி கேட்கமாட்டார்கள். ஆனால் சபை மூலமாக தொழில்நுட்ப உத்தியோகத்தர்களைக் கொண்டு அதனை பார்வையிட வேண்டும். இதன் மூலம் பொதுமக்களுக்கு எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. கொந்தராத்துக்காக செய்கின்றார்களே தவிர மக்களுக்காக செய்யவில்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
08 ஆந் திகதிய வழக்கிற்கு பின்னர் எம்மிடம் சமர்ப்பித்த வரைபடத்திற்கும் முரனானது என்று நாம் எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பொலிஸ் நிந்தவூர் பிரதேச செயலகம், காரைதீவு பிரதேச செயலகம், சம்மாந்துறை பிரதேச செயலகம் போன்ற எல்லைகளை உள்ளடக்கியதாக இருக்கின்றது. ஏதாவது கெட்ட சம்பவங்கள் இடம்பெற்றால் ஊடகங்களில் சம்மாந்துறை பொலிஸ்

பிரிவிற்கு உட்பட்டது என்றே கூறப்படுகின்றதே தவிர சரியான ஊரை குறிப்பிட்டு கூறப்படுவதில்லை. ஊடகங்களில் எமது ஊரை மிகவும் மோசமான முறையில் விமர்சனம் செய்கின்றனர். இவ்விடயத்தை நாம் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்துவதா? அல்லது பொலிஸ் நிலையத்திற்கு தெளிவுபடுத்துவதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இது நீண்ட காலப் பிரச்சினை சம்மாந்துறை அரசியல் பிரதிநிதிகள் தொடர்ந்தும் சம்மாந்துறை பொலிஸ் பிரிவு பிரிக்கப்பட வேண்டும் என்ற நிலையில் முயற்சிக்கின்றனர். ஆனால் துரதிஸ்டவசமாக கரையோரப் பகுதிகளில் பொலிஸ் நிலையத்தை அமைப்பதற்கு 02 பெரிய ஊர்களும் தடையாக இருக்கின்றது. காணி இல்லை என்று கூறி தடை செய்கின்றனர். அதனால் ஊடகங்கள் பொலிஸ் பிரிவில் பதிவதனால் சம்மாந்துறை என்று கூறி எமது ஊர் சீர்கெடுகின்றது. எமது தீர்மானத்தை நாம் எடுக்கலாம். ஏனென்றால் 92 GS பிரிவு இதன் கீழ் வருகின்றது.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்டது என்று சில தீய சம்பவங்களை கூறும்போது வெளியூர்களில் இருந்து எங்களிடம் தொலைபேசி மூலம் அழைத்து உங்களது ஊரிலா இச் சம்பவம் இடம்பெற்றது என்று கேட்கின்றனர். எனவே இதற்கு நாமும் முடிவொன்று எடுக்க வேண்டும். அவ்வாறு 92 GS பிரிவு இருப்பதனால் ஏதாவது சம்பவம் இடம்பெற்றால் பொலிஸ் போதாமல் உள்ளது. எனவே அவைகள் பிரிக்கப்பட்டால் இங்குள்ள ஆளணி போதியளவாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பொலிஸ் பிரிவு விடயத்தில் அக்கூட்டத்தில் நானும் இருந்தேன். காரைதீவில் STF கேம் உள்ளது. அதற்கு பின் பொலிஸ் நிலையத்திற்கு இடம் வழங்குகின்றார்கள் இல்லை. அவ்வாறே நிந்தவூரிலும் இடம் வழங்குகின்றார்கள் இல்லை. அவர்களது நோக்கம் என்ன? அவர்களது பாதுகாப்பிற்கு நிலம் வழங்க முடியாமல் மறுப்பதற்குரிய நியாயம் புரியாமல் உள்ளது. இதனை அவ்வாறு விடமுடியாது. இதனை ஒரு பிரேரனையாக எடுத்து சம்மாந்தறை பொலிசுக்கு வழங்க வேண்டும்.

அதிகமான குற்றங்கள் பொலிஸ் பிரிவு இல்லாத பகுதிகளில் இடம்பெற்றாலும் ஊடகங்களில் சம்மாந்துறை என்றே குறிப்பிடுகின்றனர். அங்கு பாதுகாப்பு நேரடியாக இல்லாததனால் கரையோரங்களில், நிந்தவூர் பிரதேசத்தில் அதிகமான வன்முறைகள் இடம்பெறுகின்றது. அவர்கள் அக்குற்றச் செயலில் இருந்து விடுபடுவதற்கு பொலிஸ் நிலையம் அமைப்பதற்கு ஓர் இடத்தை நிரந்தரமாக வழங்க வேண்டும். எமது ஊரில் 5% (வீதமான) குற்றங்களே நடைபெறுகின்றது. விபத்துக்கள் இடம்பெற்றாலும் சம்மாந்தறை என்றே குறிப்பிடப்படுகின்றது. சம்மாந்துறையில் தலைக்கவசம் அனிவதை மிகவும் விணயமாக வேண்ட வேண்டும். அதுவே எமது ஊர்மக்களின் பாரிய குறைபாடாக உள்ளது. அதனை எமது மாணவர்கள் மத்தியில் எமது சபையூடாக விழிப்புணர்வுத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களது ஆழமான கருத்துக்களை உள்வாங்கியவனாக, கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்கள் குறிப்பிட்ட பொலிஸ் பிரிவுகள் தொடர்பான விடயத்தை ஓர் தீர்மானமாக எடுத்து பாதுகாப்பு அமைச்சுக்கும், பொலிஸ் IGP இற்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் சபை தீர்மானமாக அனுப்பி வைக்க வேண்டும்.

**தீர்மானம் 09**

காரைதீவு, நிந்தவூர், சம்மாந்துறை மூன்று பிரதேசங்களையும் இணைத்து எமது பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் பிரிவினை அந்தந்த பிரதேசங்களுக்கு தனித்தனியாக பொலீஸ் பிரிவுகள் அமைக்கப்பட வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.எம்.எஸ். நிலுவ்பா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ உறுப்பினர் கே.எம்.ஆர். இன்பவதி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, லோகுட கடை வீதி தொடர்பாக 06 மாதமாக கூறி வருகின்றேன். நேற்றும் அவ்விடத்தில் ஓர் விபத்து ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது அதற்கு மாற்று வழி ஏதும் உண்டா? அவ்விடத்தில் அமைந்துள்ள வீட்டுக்காரர் மாமரம் நட்டுள்ளார் அதன் கிளைகள் அவ்வீதியில் இருப்பதனாலும் விபத்துக்கள் இடம்பெறுகின்றது. அதனையும் வெட்டிவிட வேண்டும்.

அன்மையில் எமது சபையில் கடமையாற்றும் ஊழியரின் மனைவி இறந்துள்ளார். ஆனால் இது தொடர்பாக 04 பேருக்கும் தெரியாமல் உள்ளது. சபையில் ஏதாவது சம்பவம் இடம்பெற்றால் கௌரவ பெண் உறுப்பினர்கள் 05 பேருக்கும் தகவல் தர வேண்டும். நாங்களும் அத்துக்கத்தில் பங்கு கொள்ள வேண்டும். நாங்கள் 04 வருடம் இருந்துவிட்டு போரவர்கள் அல்ல. எனவே எங்களுக்கும் தகவல் கிடைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர் அவர்களே, லோகுட கடைப்பிரச்சினை என்னவென்றல் அவ்விடத்தில் வாய்கால் ஒன்று உள்ளது. நான் நீர்பாசன திணைக்கள பொறியியலாளருடன் ஒரு முறை அவ்விடத்திற்குச் சென்று அதனை என்ன செய்யலாம் என்று பார்வையிட்டோம். வாய்காலுக்கு மேலால்தான் வீதியைப் போடலாமே தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாது. வாய்காலைப் பனித்தால்தான் வீதியைப் பனித்து போடலாம். நாம் மாற்று வழியைத் தேடவேண்டும்.

நிச்சயமாக செயலாளர் அவர்களே ஊழியர்களுக்கு ஏதாவது விபத்துக்கள், சம்பவங்கள் இடம்பெற்றால் கௌரவ உறுப்பினர்கள் SMS Group உருவாகி அதன்மூலம் தகவல்களைப் பரிமாறினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சீ.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது பிரதேசத்திலே வீதிகள் அபிவிருத்தி செய்ததன் பின்னர் அதற்கான பெயர்பலகை போடுகின்ற போது வீதியின் அருகில் போடாமல் இரு வீதிகளையும் இணைத்தவாறே பெயர் பலகை போடுகின்றனர். அதன் ஒரு கட்டமாகத்தான் உடங்கா - 02 இல் குண்டர் வீதி அபிவிருத்தி செய்த பின்னர் பெயர் பலகையை 02 வீதிகளையும் இணைத்தவாறு பேடுகின்றமையினால் அங்கு விபத்துக்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களும் அதிகமாக இருக்கின்றது. அதன் அடிப்படையில் அதற்கான ஒழுங்குகள் இருக்க வேண்டும். அதனை எமது சபையூடாக நிவர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கான அளவினை நாம் வழங்கினால் சிறப்பாக இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இவைகள் கம்பரலிய, றன்மாவத்தை திட்டத்தின் கீழ் வருகின்றது. பெயர் பலகைகள் இடும்போது பிரதேச சபையின் உத்தியோகத்தரின் கட்டளைப்படி செய்யப்பட வேண்டும் என்று பிரதேச செயலகத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்க வேண்டும்.

**தீர்மானம் 10**
வீதிகளுக்கு பெயர்பலகைகள் இடும்போது பிரதேச சபையின் உத்தியோகத்தரின் கட்டளைப்படி செய்யப்பட வேண்டும் என்று சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சீ.எம். சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

**கௌரவ உறுப்பினர் எம். எஸ். சரிபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உள்ளூராட்சி மன்றத்தினால் நடாத்தப்பட்ட 03 மாத கால பயிற்சி நெறிக்கு நான் கலந்து கொண்டு அதில் நான் தெரியாத வியடயங்களைக் கற்றுக் கொள்வதற்கு உதவிய எமது கௌரவ தவிசாளர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 03 ஆம் திகதி இடம்பெற்ற இறுதி வகுப்பில் சபைகளின் ஒவ்வொரு தவிசாளர்களையும் சுட்டிக்காட்டும் போது எமது சம்மாந்துறை தவிசாளரை பெருமைப் படுத்தி காரைதீவு தவிசாளரில் இருந்து உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் உள்ள அனைத்து அதிகாரிகளும் சுட்டிக் காட்டும் போது நான் மட்டும் அவ்விடத்தில் இருந்து கரகோசத்தைக் காட்ட முடிந்தது. ஏனென்றால் அனைத்து சபைகளிலும் உறுப்பினர்களின் வருகை அதிகமாக இருந்தது. சம்மாந்துறை பிரதேச சபையில் 20 கௌரவ உறுப்பினர்கள் இருந்தும் நான் மாத்திரம் சென்றதற்கினங்க எமது தவிசாளரை புகழ்பாடியதையிட்டு மிகவும் மனமகிழ்ந்தவளாக இருக்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்களே மீண்டும் 01 வருட பயிற்சி ஆரம்பிப்பதனால் எமது உறுப்பினர்கள் அதிலும் கலந்து கொள்ளலாம் என்று நான் சந்தோசமாக கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனென்றால் அவ்விடத்தில் குறிப்பிட்டதில் மகிழ்சியான விடயம் எங்களை எந்தவிதமான நிகழ்விற்கும் அழைக்கும் போது விசேட அதிதி என்று அழைக்கப்படுகின்றது. நிச்சயமாக விசேட அதிதி என்று எங்களை யாரும் குறிப்பிடக்கூடாது. உத்தியோகத்தரை கௌரவ அதிதி என்று அழைத்தும் எங்களை விசேட அதிதி என்று அழைப்பதும் மிகவும் தவறானது என்பதனை நான் அவ்விடத்தில் உணர்ந்து கொண்டேன். அன்மையிலும் அல் அர்சத் பாடசாலையில் இருந்து அழைப்பிதழ் வந்த போதும் விசேட அதிதிகள் என்ற இடத்தில் சேர்கப்பட்டது மிகவும் கவலைக்குரிய விடயம். வலையக்கல்வி அலுவலக உத்தியோகத்தரை கௌரவ அதிதி என்றும் கௌரவ உறுப்பினர்களை விசேட அதிதி என்றும் அழைக்கின்றனர்.

இதன் வித்தியாசம் எவ்வளவு பாரதூரமான விடயம் என்பதை இப்பயிற்சி நெறிமூலம் மிகவும் தெளிவாக கற்றுக் கொண்டேன். எதிர்வரும் காலங்களில் எவராவது எம்மை விசேட அதிதிகள் என்று அழைப்பிதழ் தந்தால் கலநது கொள்ளக்கூடாது என்பதனையும் எமது கௌரவ உறுப்பினர்களை வேண்டிக் கொள்கின்றேன். கௌரவ தவிசாளர் அவர்கள் எதிர்வரும் காலங்களில் எங்களுக்கு ஏதாவது அழைப்பிதழ்கள் தரும்போது எங்களை கௌரவ உறுப்பினர்கள் என்று கௌரவிக்க வேண்டும் என்று கரியாலயங்களிலும் அனைத்து இடங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினரஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ பிரதம மந்திரி அமைச்சினூடாக 20 மில்லியன் திட்டத்தின் கீழ் RIDEP நிகழ்சித் திட்டத்தின் கீழ் பாதைகள் எமது பிரதேச சபையினால் இடப்பட்டுள்ளது. அதன் பெயர்ப்பலகைகள் ஒவ்வொரு நிகழ்சித்திட்டத்திற்கும் அதனது சுற்றறிக்கைகள் அளவுகள் இடப்பட்டுள்ளது. அதற்கமையவே பெயர்பலகை இடப்பட்டுள்ளது. அதே

நேரத்தில் அப்பாதைகளில் இடப்பட்ட பெயர்பலகை வேறு பாதைகளை இணைந்தடிப்படையில் போடப்படவில்லை என்பதனை நான் தெளிவுபடுத்த வேண்டும்.

சம்மாந்துறை பொலிஸ் பிரிவு தொடர்பாக மறுமொழி அளித்த போதிலும் இதனையும் உள்வாங்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். அதாவது சம்மாந்துறை பிரதேச சபைக்கு ஊடகங்களை அழைத்து அவர்களிடத்தில் சம்மாந்துறை பொலிஸ் பிரிவு என்ற சொற்பதத்தை உபயோகிக்க வேண்டாம் என ஆலோசனைகள் வழங்குவது சிறப்பாக இருக்கும். அத்துடன் ரூப்பவாஹினி தொலைக்காட்சியூடாகத்தான் நாடளாவிய ரீதியில் சம்மாந்துறை என்ற சொல் உபயோகிக்கப்படுகின்றது. எனவே அந்தந்த நிறுவன கட்டுப்பாட்டாளர்கள் அல்லது தலைவர்களுக்கு உத்தியோக பூர்வமாக எழுத்துமூலம் அறிவிப்பது சிறப்பாக இருக்கும் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.